# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

தலைமைக் கழகம்

எண் : 15, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014

தொலைப்பேசி : 044 - 2848 1235


"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி : 09.12.2022

## *தலைமைக் கழக அறிவிப்பு*

**மதுரையில், டிசம்பர் 16ஆம் தேதி**

**ஐக்கிய கிறிஸ்துமஸ் பெருவிழா மற்றும்**
**ஏழை, எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!**

**கழகப் பொதுச்செயலாளர் திரு.டிடிவி தினகரன் பங்கேற்கிறார்!**

**'மனித வாழ்க்கையில் நம்பிக்கை என்னும் சக்தியைப் பெற்றுவிட்டால், இந்த உலகில் முடியாதது எதுவுமில்லை'** என்று போதித்த ஏசுநாதர் அவதரித்த கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி, மதுரை அரசரடி, தமிழ்நாடு இறையியல் கல்லூரி வளாகத்தில் வரும் 16.12.2022 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு ஐக்கிய கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்படுகிறது.

இந்த கிறிஸ்துமஸ் பெருவிழாவில் **கழகப் பொதுச்செயலாளர் திரு.டிடிவி தினகரன் அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கேற்று, ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றவிருக்கிறார்கள்.**

கிறித்துவ பேராயர்கள், ஆயர்கள் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ள இவ்விழாவில் **கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

**தலைமைக்கழகம்**
**அம்மா மக்கள் முன்னேற்றக்கழகம்**